<6bogar><Natural Sciences><Medicine><1985><Book><போகர் வைத்தியம் - 700><டாக்டர் சே. பிரேமா><30><

-1-

போகமுனிவர் வைத்தியம் 700

பாயிரம்

கடவுள் வணக்கம்

யோகத்தின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் நிலைகளின் அதிதேவதைகளாக முறையே விளங்கும் விநாயகர், பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் ஆகியோரையும் மருத்துவத் துறைக்குச் சிறந்த ஆசிரியர்களாகத் திகழும்

-2-

சித்தர்களையும் வணங்கி மருத்துவத்தின் நுட்பங்களைக் கூறத் தொடங்குகின்றேன்.

போகர் ஏழாயிரம் என்ற பெரிய நூலை முதலில் இயற்றினேன். இப்போது அதைச் சுருக்கி எழுநூறு பாடல்களாகக் கூறுகிறேன். வாதம் முதலிய நோய்களைப் பற்றிய மருத்துவச் செய்திகளும், மெய்ப்பொருட் செய்திகளும், ஆகருடணம், உச்சாடனம். தாம்பனம், பேதனம், மாரணம், மோகனம், வசியம் வித்து

வேடணம் என எண்வகைப்பட்ட வித்தைகளும் இந்நூலுள்
கூறப்பட்டுள்ளன. இவ்வளவு விளக்கமாக வேறு யாரும்
நூல்
இயற்றவில்லை இதில் கருக்குருவைப் பற்றியும் விரிவாகக்
கூறுகிறேன். இந்த நூல் பல அரிய மருத்துவ நூல்களைக் கற்கத்
திறவுகோலாக அமையும்.
பல மருத்துவ நூல்களுக்கும் துணைபுரிவதாக இந்நூலை
இயற்றியமைக்காகப் பல சித்தர்களும் வாயாரப் புகழ்ந்தனர்.
-3-
பிரமமுனி என்பவரைப் பெரியவர் என நினைத்து என்னுடன்
உறவாடிய அவரிடம் நூலைத் தந்தேன். அவர் அதை மறைக்க
முயன்றார், நாம் ஏமாந்துவிட்டோம் என்றறிந்து அப் பிரம
முனியுடன் வாதிட்டுத் திறமையாக நூலைத் திரும்பப் பெற்று
வெளிப்படுத்துகிறேன்.
இந்நூலுள் உலக மக்களின் நன்மைக்காகக் கடைச்சரக்கு,
கட்டு, பற்பமாவதற்குரிய பொருள், மாத்திரை, செந்தூரம்,

லேகியம், கிருதம், கற்பம், திராவகம், செயநீர், பற்பம்,
களங்கு,
தைலம், சூரணம், கியாழம் ஆகியவற்றோடு
சிறப்பாகக் கருக்
குருவைப் பற்றியும் சொல்கிறேன்.
-4-
 நிலத்தின் நாதம் எனப்படும் பூநீறு இல்லாவிட்டால்
இரசவாதமோ மருத்துவமோ செய்ய இயலாது.
உவர்மண்
நிலத்தில் இப் பூநீறு எடுக்கப்பட வேண்டும். தை,
மாசி, பங்குனி
ஆகிய மாதங்களில் இரவில் அங்கேயே
தங்கியிருந்து பூநீறு
சேகரிக்கப்பட வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட
பூநீற்றை
-5-
ஒரு மண்பாண்டத்தில் போட்டுத் தூய நீர்
ஊற்றவேண்டும்
நன்றாகக் கலக்கித் தெளியவைக்க வேண்டும். பிறகு
தெளிவை
நீக்கிவிட்டு வண்டலைப் புதிய ஓட்டில் வைத்து
வெய்யிலில்
உலர்த்த வேண்டும். நன்றாக உலர்த்தும் மறுபடியும்
நல்ல
தண்ணீர் தெளிக்க வேண்டும். பிறகு மீண்டும்
உலர்த்தினால்
உப்பு ஆகும். இதே செய்முறையைப் பத்து முறை
திரும்பத்

திரும்பச் செய்ய வேண்டும்.
இவ்வாறு எடுக்கப்பெற்ற பூநீற்றைச் சுத்தி செய்வதற்கு
ஒரு செய்முறை உள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பூநீற்றை
ஒரு மண்பாண்டத்தில் போடவேண்டும். அப் பாண்டத்தின்
அடியில் ஒரு சிறிய தொளையிட்டு அதில் பரும்புல்லின்தாள்
அல்லது வைக்கோள் இறுக்கமாகச் செருகி வைக்கவேண்டும்.
அப் பாண்டத்தில் நல்ல நீர் ஊற்ற வேண்டும். அக் கதம்பையின்
வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் மூக்கைப் போன்ற பகுதியின்
வழியாகச் சுத்தமான தண் ணீர் சொட்டுச் சொட்டாக
வெளியேறிவிடும். சுத்திகரிக்கப்பட்ட தூய பூநீறு பாண்டத்தில்
தங்கும்.
முற்கூறிய கதம்பையின் வழியாக இறங்கிய நீரை நன்றாக
வெய்யிலில் உலர்த்தி உலர்த்தி எடுக்க இரசவாதத்திற்கு முதற்
பொருள் ஆகிய உப்பு கிடைக்கும். இதை அறியாதவர்கள்
பூநீற்றை வாரித் தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி, கல்லுப்பையும்
சுண்ணாம்பையும் சேர்த்துச் சவுக்காரம் என்பர். அது

பயன்
தராது.
-6-
இரண்டுபடி சாதாரணக் கல்லுப்பைச் சிறுநீரில்
நன்றாகக்
கரைத்துத் தெளியவைத்து இறுத்த வண்டலை
வெய்யிலில்
உலர்த்தினால் உப்பாகும். இவ்வுப்பை இதே
செய்முறையைத்
திரும்பத் திரும்பப் பத்துமுறை செய்து எடுத்து
வைத்துக் கொள்ள
வேண்டும். இது இரண்டாவது உப்பு ஆகும். (பூநீற்று
உப்பு
முதலாவது).
ஒருபடி கற்சுண்ணத்தைப் பாத்திரத்தில் போட்டுச்
சிப்பி
நீர் வார்க்கவேண்டும். சிப்பி நீரில்  அக்
கற்சுண்ணத்தை
நன்றாகக் கரைத்து வெய்யிலில் காயவைத்து
உப்பாக்கிக்
கொள்ளவேண்டும். இப்படியே திரும்பத் திரும்பப்
பத்துமுறை
செய்யவேண்டும். இவ்வாறு தயாரித்து எடுத்த உப்பு
மூன்றாவது ஆகும். இவ்வாறு தனித்தனியாக மூன்று
உப்புகளைத்
தயாரித்த பிறகு அவற்றிலிருந்து முப்பூச் செய்தலே
சித்தர்கள் காட்டிய வழியாகும். வேறு வகையாகச்
செய்தால்

பயனில்லை.

-7-

இந்த மூன்று உப்புகளையும் கல்வத்தில் போட்டுச் சிப்பி
நீரிட்டு அரைத்து வில்லைகளாக்கிக் கொள்ளவேண்டும்.
அவ்வில்லைகளை நன்றாக வெய்யிலில் உலர்த்தி ஓர் ஓட்டில்
வைத்துச் சீலை செய்து புடம் வைக்க வேண்டும். புடத்திலிருந்து
சுத்தமாக எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு அரைத்து வில்லை
தட்டிக் காயவைத்துக் குக்குட புடம் வைக்க வேண்டும்.
இப்போது சிறப்பான முப்பூ கிடைத்துவிடும்.

இப்படித் தயாரித்துக் கொண்ட முப்பூ இரசவாதத்திற்கு
இன்றியமையாத பொருளாகும். சிறந்த மருத்துவத்திற்கும்
மூலம் ஆகும். இந்நூலில் சொல்லப்படுகின்ற லேகியங்கள்,
தைலங்கள், கட்டினங்கள், உருக்கினங்கள், நீற்றினங்கள்,
மாத்திரைகள், செந்தூரங்கள் ஆகிய அனைத்திலும் ஒரு காசெடை
இந்த முப்பூவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச்
செய்யப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்தினால்

எல்லா
நோய்களும் விரைவில் அகலும்.
-8-
 இரசவாதிகள் அரிதின் முயன்று இந்த முப்பூவை
எப்படியேனும் செய்துகொள்வர். சாதாரண
மருத்துவர்கள் இவ்வளவு
பாடுபடமாட்டார்கள். இத்தகைய முப்பூ
கிடைக்காவிட்டால்
முதலிற் கூறப்பட்ட பூநீற்றைப் பதினாறு முறை சுத்தி
செய்து
முப்பூவுக்குப் பதிலாகப் பயான்படுத்தி மருத்துவம்
செய்யலாம்.
 முப்பூவைப் பயன்படுத்தினால் தீராத வியாதிகள்
இல்லை.
இனி முப்பூவைக் கொண்டு வேதிக்கும் வழிகளைக்
கூறுகிறேன்.
முப்பூவைக் கல்வத்தில் இட்டு அதற்குச் சமஅளவு
வெள்ளெருக்கம் பாலும் ஒரு காசெடை கற்பூரமும்
சேர்த்து ஒரு சாமம்
வெய்யிலில் வைக்கவேண்டும். அப்படி வைத்தால்
அக் கலவை
முறிந்துவிடும். இந் நீரோடு கடுங்காரச் செயநீர்
சேர்த்துக்
கல்வத்திலிட்டுச் சாந்துப் பதம் வரும் வரை
அரைக்கவேண்டும்.
பிறகு வெய்யிலில் ஒரு சாமம் காய
வைக்கவேண்டும். காய்ந்த
பிறகு இதை ஓர் ஓட்டில் வைத்து மேலே வேறோர்

ஒட்டை
மூடிக் குக்குடபுடத்தில் இடவேண்டும். இதே மாதிரி
மூன்றுமுறை
-9-
திரும்பத் திரும்ப அரைத்துப் புடமிடவேண்டும்.
அப்படிச்
செய்தால் குற்றமற்ற சவுக்காரச் சுண்ணம் கிடைக்கும்.
-11-
சுண்ணம் எனப்படும் சவுக்கார வழலையைக்
கொண்டு
கடுங்காரக்கரு செய்யும் செய்முறையைக் கூறுகிறேன்.
சிவுப்பான நிறத்தை உடையவளும் எவ்விதமான
வியாதியும்
இல்லாதவளுமான ஒரு பெண்ணின் சுரதநீரைச்
சேகரிக்க
வேண்டும். முதல் தரம் ஊறும் சரதநீர் மிகச் சிறந்தது.
கிடைக்காத போது இரண்டாம் முறை, மூன்றாம்
முறை
கிடைப்பதையும் எடுத்துக் கொள்ளலாம்.
கற்பூரச் சிலாசத்துச் சுண்ணத்தை வெற்றிலை
பாக்குடன்
போட்டுக் கொண்டாலும், தேங்காய்ப்
பனைவெல்லத்துடன்
சேர்த்துச் சாப்பிட்டாலும் சுரதநீர் மிகுதியாக ஊறும்.
இவ்வாறு ஊறும் சுரதத்தைப் பீங்கான் கிண்ணத்தில்
சேகரித்துக் கொள்ளவேண்டும். இந்தச்
சுரோணிதத்தில் ஒரு காசு
எடை ஆணின் சுக்கிலத்தையும் கற்பூரத்தையும்

போட
வேண்டும். போட்டால் எல்லாம் சேர்ந்து
நீர்த்துவிடும்.
வீரம், புனுகு, பூரம், துவரஞ்செடியில் இருக்கும்
வண்டின்
மார்புப் பகுதி, பாதரசம், தன்முதுகில்
ஆறுபுள்ளிகளை உடைய
வண்டின் முட்டை, கறுப்பு நாபி ஆகியவற்றை
வகைக்கு
ஒருபலம் அந்நீரில் போடவேண்டும். இம்மருந்துகள்
கரையும்
போதே ஒரு குச்சியைக் கொண்டு நன்றாகக் கடைய
வேண்டும்.
கையால் தொடக்கூடாது. கைபட்டால் வெந்துவிடும்.
கடைந்த
பிறகு வெய்யிலில் உலர்த்த வேண்டும்.
-12-
உலர்ந்ததும், சவுக்கார வழலையைச் சேர்த்து
மறுபடியும்
வெய்யிலில் உலர்த்த வேண்டும். உலர்ந்ததைக்
கடல்நுரைச்
சுண்ணம், கிளிஞ்சிற் கண்ணம், குக்குடச் சுண்ணம்,
வலம்புரிச்
சுண்ணம், வெள்ளைக் கற்சுண்ணம் ஆகிய ஐந்துங்
கூட்டிச்
செய்யப்பட்ட குகையில்வைத்து மூடவேண்டும்.
மூடிய பின்பு நன்றாகச்
சுண்ணச் சீலை சுற்றி மீண்டும் வெய்யிலில் உலர்த்த

வேண்டும்.
பிறகு பத்து விரட்டியில் புடம்போட்டு ஆறிய பின்பு எடுத்துக்
கொள்ள வேண்டும்.
இவ்வாறு எடுக்கப்பட்டதை முன்னே சொல்லப்பட்ட நீர்
விட்டு அரைத்து ஓர் உருண்டையாக்கிக் கொள்ளவேண்டும்.
இதனை ஒரு சுண்ணாம்புக் குகையில் வைத்து மறுபடியும் பத்து
எருவில் புடம்போட்டு எடுக்க வேண்டும். இதனைக்
கல்வத்திலிட்டு முன்போலவே அந்த நீரைச் சேர்த்து அரைத்துப் புடம்
போட்டு எடுக்கவேண்டும். இச் செய்முறை மாறாமல் திரும்பத்
திரும்ப ஐந்துமுறை செய்யப்பட வேண்டும்.
இவ்வாறு எடுக்கப்பட்டதுதான் வழலைச் சுண்ணம் ஆகும்.
இது மிகச் சிறப்பான ஒரு பொருளாகும். இதற்கு மேலும்
காரம் ஏற்றுவதற்கு உரிய முறையைக் கூறுகிறேன். தங்கச்
சுண்ணம், வீரச்சுண்ணம், பூரச்சுண்ணம், நவச்சாரச் சுண்ணம்,
சீனச்சுண்ணம் ஆகிய ஐவகைச் சுண்ணங்களையும் வகைக்குக்
காசெடை சேர்த்து முன் சொன்ன நீரில் அரைத்து உருண்டை

பிடிக்க வேண்டும். இதனை வில்லையாக்கி
வெய்யிலில்
உலர்த்திச் சுண்ணக்குகையில் மூடிச் சுண்ணச்சீலை
செய்து
குக்குடப் புடம் போடவேண்டும். இந்தச் செய்முறை
மிக
இரகசியமானதாகும். மிக அரிய இதனை நான்
வெட்டவெளியாகக்
கூறிவிட்டேன்.
 இவ்வழலைச் சுண்ணத்தால் மலைகள் உருகும்.
அனைத்து
உலகங்களும் வேகும். ஒன்பது வகையான
உலோகங்களும்
மணிகளும் வேகும். அறுபத்து நான்கு வகைப்
பாடாணங்கள்,
இருபத்தைந்து வகை உப்புக்கள், நூற்றிருபது வகை
உபரசங்கள்
ஆகிய அனைத்தையும் இது கட்டும். இதனால்
மயில்துத்தம்
வெந்து சாம்பராகிவிடும். இதனோடு சேரும்
அவ்வளவில்
நவச்சாரம் கட்டியாகிவிடும்.

 சவுக்காரச் சுண்ணம் சேர்த்தால் பாதரசம் கட்டியாகி
விடும். இச் சவுக்கார வழலைச் சுண்ணம் பற்பல
கட்டினங்கள், உருக்கினங்கள், மெழுகுகள்,
களங்குகள், செய நீர்கள்,
திராவகங்கள், செந்தூரங்கள், குளிகைகள்

ஆகியவற்றைச்
செய்யப் பயன்படுவதோடு இரசவாதத்திற்கும்
உதவும்.
இரசவாதத்தைப் பற்றி முன்ந்னுக்குப்பின் முரணாகக்
கூறிச் சித்தர்
முதலியோர் உண்மையை மறைத்தனர். வேதத்தின்
முடிந்த
மெய்ப்பொருளுக்கு இணையான சிறப்பு வாய்ந்த
இவ்வழலையை நான் தெளிவாகக் கூறிவிட்டேன்.
இதற்காகச்
-15-
சித்தர்கள் என் மீது வருத்தம் கொண்டனர். உலக
நன்மை
கருதி நான் அவர்களைச் சமாதானப்படுத்தி
இந்நூலை
உரைத்தேன்.
இத்தகைய சிறந்த இந்நூல் சான்றோர்களுக்கே பயன்
படும். அறஞ் செய்யாத உலோபியருக்கு ஆகாது.
எப்படியோ
பொருளீட்டி உயிர்வாழ வெளிவேடம் போடுகின்ற
வஞ்சகர்கள் மிகப் பலர். அவர்கள் பெரிய
ஞானாசிரியரைப் போல்
நடித்து வீண் சொற்களால் மிரட்டுவர். அவர்களால்
உலகத்துக்குப் பயனொன்றும் இல்லை. மக்களை
ஏமாற்றிப் பணம்
பறித்துத் திரிவதே அவர் தொழில். அத்தகையவர்கள்
உலகில்
உள்ள எல்லாச் செடிகொடிகளையும் அறுபத்து

நான்கு
வகையான மருந்துச் சரக்குகளையும் சுட்டுச் சுட்டு
முயன்றாலும் இரசவாதத்தில் வெற்றிபெற மாட்டார்.
இம்முயற்சியில் ஈடுபட்டு வீணே இறந்தோர் மிகப்
பலர். அரிதின் முயன்று
இரசவாதத்தை அறிந்ததோடு மெய்ஞ்ஞானமும்
கைவரப்
பெற்றவரே தகுதியுடைய மாணவர்களுக்கு மட்டும்
உபதேசிப்பர்.

உனக்கு உபதேசிப்பவர் வெறும் வேடதாரியாக
இல்லாமல்
உண்மையான சிவயோகியானால் உபதேசம்
பெறலாம்.
உபதேசம் புரியும் ஆசானை வணங்கிப்
பரம்பொருளை
உள்ளத்தில் நிலைக்கச் செய்து தியானிக்க வேண்டும்.
வீண்
பெருமை பேசலாகாது. மெய்யறிவை நாடி
இறைவியைப்
பூசிக்கவேண்டும். இவ்வொழுக்கத்துடனிருந்து
பெரியோர்களுக்குப் பணிவிடை செய்தால் அவர்கள்
மூலம் அறிவைப் பெறலாம்.

குருவின் அருளின்றி எந்தக் கல்வியும் கைகூடாது.
ஆசானின்றிப் புத்தகங்களை மட்டும் தொகுத்து
எத்தனைதான்
கற்றாலும் தெளிவு பிறக்காது. ஆசானுடைய அநுபவ
அறிவின் துணை
இல்லாதவிடத்து வெறும் நூலறிவு பயனற்றதாகும்.

இரசவாதத்தைத் தக்க ஆசானிடம் முறையே கற்க வேண்டும். நல்ல ஆசான் கிடைக்காத போது என் நூலைப்
பிழையற உணர்ந்து ஆசானாகக் கொள்ளலாம். இந்நூற்
பொருளைச் செவ்வையாக அறிந்து போற்றினால் இரசவாதம்
அட்டாங்கயோகம் முதலிய யாவும் கைகூடும். இந்நூலில்
சவுக்கார வழலைச் சுண்ணம் என்ற கருக்குருவை வெளிப்படையாகக்
கூறிவிட்டேன்.

மிகத் தெளிவாகக் காட்டும் இந்த நூலைப் பொன்னே போல் போற்றவேண்டும். தகுதி இல்லாதவர்களுக்குக் கற்றுத்
தரலாகாது. அவ்வாறு கற்பித்தால் தீமை விளையும். இந்த
நூலில் சிறந்த பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இதனைச்
சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முறைதவறி
வெறும் பொருளாசை கொண்டு திரிந்தால் எல்லா முயற்சிகளும்
வீணாகிவிடும்.

தன் திறமையை வெளிப்படுத்தாமல் அடங்கி வாழ்ந்து
அறிவை வளர்த்துக் கொண்டு பிராணாயாமம்

பயின்று
வேதாந்த ஞானத்தைப் படிப்பதுபோல் சிரத்தையுடன்
பயிற்சியாளர்களுக்கு உணவளித்தும் திருக்கோயில்
முதலிய திருப்பணிகள்
செய்தும் வாழ வேண்டும். அறம் செய்யாவிட்டால்
தீவினை
-18-
மூளும். அதன் பயனாகப் பல நோய்கள் உண்டாகும்.
எனவே
அறம் செய்ய வேண்டும். இறைவியைப் பூசிக்க
வேண்டும்.
சாராயம் போன்ற மதுவகைகளை அருந்தக் கூடாது.
எத்தகைய
மதிமயக்கமும் கொள்ளக் கூடாது. இனி மருந்துச்
சரக்குகளைச்
சொல்லத் தொடங்குகிறேன்.
-19-
நிலப்பனை, கோரைக்கிழங்கு, சிவனார் வேம்பு, சதா
மூலிக்கிழங்கு, விலாமிச்சை, வில்வம், நன்னாரி,
கற்றாழை,
அசுவகெந்தி, கொற்றான், ஓரிதழ்த் தாமரைக் கிழங்கு,
வெட்டி
வேர், தாமரைத்தண்டு, நெல்லி, ஆல்விழுது,
நீர்ப்பூலா, அறுகு,
வல்லாரை, விழுதி, சங்கஞ்செடி, மிளகரணை,
கொடிவேலி,
உத்தாமணி, சிற்றாமல்லி, பேராமல்லி, சிறுபூளை,
ஐவிரலி,

சிறுகாஞ்சொறி, தூதுவளை, கண்டங்கத்திரி,
நிலவாகை,
சிற்றாமுட்டி, கருங்காலி, நாவல், அத்தி, வெள்ளறுகு,
பிரப்பங்கிழங்கு,
கையாந்தகரை, பொன்னாங்காணி, வெள்ளைச்
சாரணை,
நெரிஞ்சில், குழிமீட்டான், சிவதை, முந்திரி,
முருங்கை, சிறுதுத்தி,
முக்காய் வேளை, அகில், மலாய்ச் சந்தனம்
ஆகியவற்றின்
வேர்களை வகைக்கு ஐந்து பலமாகச் சேகரித்துக்
கொள்ள
வேண்டும்.
-20-
முற்கூறப்பட்ட நாற்பத்து ஒன்பது வேர்களையும்
(வகைக்கு
ஐந்து பலம்) நன்றாக இடித்து அடிப்பாகம் கனமாக
உள்ள
ஒரு பாத்திரத்திற் போட்டுப் பதினாரு மரக்கால்
தண்ணீர்
ஊற்றி நான்கு மரக்காலாகச் சுண்டும் வரை நன்றாகக்
காய்ச்ச
வேண்டும். அதற்குப் பூசை செய்து எடுத்துக்
கொண்டு மறுபடியும்
வேறொரு பாத்திரத்தில் இட்டு நன்றாகக் காய்ச்சி,
நல்ல
காற்றில் ஆற விட்டு இக் கியாழத்தைத் தனியாக
எடுத்து வைத்துக்

கொள்ள வேண்டும்.
 சுத்தமான பாத்திரத்தில் நல்ல பசும்பால் நான்கு படி
எடுத்துக் கொண்டு அதில் ஏழு முறை சுத்தி
செய்யப்பட்ட கஞ்சா
பத்து பலம் போட்டு அது இரண்டு படியாகச்
சுண்டுமளவுக்கு
நன்றாகக் காய்ச்சி முன் சொன்ன கியாழத்தில் சேர்க்க
வேண்டும்.
-22-
 முன்னாற் சொல்லப்பட்ட பால் கியாழம் ஒரு படி
எடுத்துக்
கொண்டு அதில் வெள்ளாட்டுப் பால் ஒரு படி,
தேங்காய்ப்பால்
இரண்டு படி சேர்க்க வேண்டும். இவ்வாறு சேர்த்து
வைத்துக்
கொண்ட பிறகு -
 சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, ஏலம், நீர்க்கிராம்பு,
கோஷ்டம், குங்குமப்பூ, கோரோசனை, வால்மிளகு,
குராசானி,
ஓமம், வாலுளுவையரிசி, கூகைக்கிழங்கின் மாவு,
சீரகம், கருஞ்
சீரகம், யானைத்திப்பிலி, தாளிசப்பத்திரி, வாய்
விளங்கம்,
-23-
சடாமாஞ்சி, வெட்பாலை, சுக்கு, மிளகு, திப்பிலி,
திப்பிலிமூலம்,
அதிமதுரம், கொத்துமல்லி, வசம்பு, இலவங்கப்பத்திரி,
மதனகாமப்

பூ, தகரைவித்து, கசகசா, மஞ்சிட்டி, சாரப்பருப்பு, கடுக்காய்,
நெல்லிக்காய், தான்றிக்காய், சமுத்திராப்பழம், வலம்புரிக்காய்,
கர்க்கடகச் சிங்கி, பனம்பூ, வெந்தயம், விழலரிசி, சிறுநாவற்பூ,
சிற்றரத்தை, பறங்கிப்பட்டை, கார்போக அரிசி, பேரரத்தை,
கத்தூரிப்பட்டை, தாமரைக்கிழங்கு, மரமஞ்சள், நிலப்பனை,
வேர், மரவள்ளிக்கிழங்கு, செங்குவளைக்கிழங்கு, மிளகுவேர்,
வெண்தோன்றிப்பூ, இஞ்சி, கடுகுரோகணி, சிறுதேக்கு,
கொடிவேலி ஆகிய இச்சரக்குகளை எல்லாம் நன்றாகக் காயவைத்து
இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ள
வேண்டும்.

அத்தி விதை, முருங்கை விதை, ஊமத்தை விதை, சடைக்
காஞ்சா விதை முன்னை விதை, அகத்தி விதை, நத்தைச்சூரி விதை,
நெருஞ்சில் விதை, கருவேல விதை, அழிஞ்சி விதை, எட்டி விதை,
பூனைக்காலி விதை, தகரை விதை, நீர்முள்ளி விதை, ஆலவிதை,
நாயுருவி விதை, வில்வ விதை, கோதுமை, எள்,

உழுந்து,
குமட்டி விதை, மாதுளை விதை, ஆவாரை விதை, தேற்றாங்
கொட்டை, ஆளி விதை, கூந்தற்பனை விதை, நெல்லி விதை,
அரச விதை பூவரச விதை, வெண்குன்றிமணி விதை, சரக்,
கொன்றை விதை, புன்னை விதை, செம்பை விதை,
புளியங்கொட்டை, அவரை விதை, மூங்கில் விதை, பாதாம் பருப்பு,
ஆமணக்கு முத்து, முந்திரிப் பருப்பு ஆகிய இவற்றையெல்லாம்
வகைக்கு அரைப் பலம் எடுத்துக் கொள்ள வேண்டும்.
இவற்றையும் காயவைத்து இளவறுப்பாக வறுத்துத் தூளாக்கி முன்
சொன்ன சூரணத்தோடு சேர்க்க வேண்டும்.
தென்னம் பூ, முருக்கம் பூ, மகிழம் பூ, இருப்பைப் பூ, புன்கம்
பூ, மாதுளம் பூ, வில்வப் பூ, மாம் பூ, கோங்கம் பூ, இலவம் பூ,
அத்திப்பிஞ்சு, சண்பகப் பூ, சிறு அம்மான் பச்சரிசி, பருத்திப் பூ,
வெள்ளரிப் பூ, சிறு நெருஞ்சிற் பூ, காட்டாத்திப் பூ, சிறுவிளாப் பூ,
முள்ளிலவம் பூ ஆகிய மலர்களை வகைக்கு அரைப்பலம் எடுத்து
உலர்த்தி இடித்துச் சூரணமாகச் செய்து முன்னர்

செய்து
வைத்துள்ள பொடியோடு கலக்கவேண்டும்.
-24-
முருங்கை, வாகை, கொன்றை, கருவிளா, கருவேல், வேம்பு,
மா ஆகிய மரீங்களின் பிசின் வகைக்கு அரைப்பலம் எடுத்து
நிழலில் உலர்த்திச் சூரணம் செய்து முன் மருந்தோடு சேர்க்க
வேண்டும். மேலும் இரண்டு பலம் சீந்தில் சர்க்கரை போட
வேண்டும். சோர்வின்றி இவையனைத்தையும் திரட்டி
முறையாகச் செய்தால் மேகம் முதலிய பல நோய்களுக்கு மருந்தாகும்.
இவ்வாறு சேர்த்துக் கொண்ட சூரணங்களுக்குச் சம எடை
வங்காளச் சீனி சேர்த்து முன் செய்து வைத்துள்ள கியாழத்தில்
-25-
கூட்டிப் பாத்திரத்தில் இட்டு அடி பிடிக்காமல் கிளறிக் கொண்டே
காய்ச்சிப் பாகுபதம் ஆக்கிக் கொள்ள வேண்டும். நன்றாகப்
பாகான பிறகு முந்திரி, பேரீச்சை இரண்டிரண்டு பலமும் பசு
நெய் இரண்டு படியும் சேர்க்க வேண்டும். சேர்த்து மெழுகுபதம்

வரும் வரையில் நன்றாகக் கிளறிக் கொண்டிருந்து இறக்கி
வைத்துவிட வேண்டும்.
இறக்கி வைத்துச் சூடு ஆறிய பிறகு ஒரு படி கொம்புத்தேன்
வார்க்க வேண்டும். அப்பிரகச் செந்தூரம், வங்கச் செந்தூரம்,
ரச பற்பம், அரிதார பற்பம், கல்நார் பற்பம் ஆகியவற்றை
வகைக்கு ஒரு பலம் போட்டு எல்லாம் நன்றாகக்
கலக் கும்படியாகக் கிண்டி லேகியமாக்க வேண்டும்.
லேகியத்தைச் செய்து முடித்த பிறகு சாபம் தீரவேண்டி
விநாயகர், முருகன், தேவி ஆகிய தெய்வங்களுக்குப் பூசை புரிய
வேண் டும். வியாதி மரண மந்திரத்தை நூறாயிர முறை
உருவேற்றிச் செபிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் ஒன்பது
கோள்களால் ஏற்படும் இடையூறுகள் நீங்கும். இவ்வழிபாடுகள்



முடிந்த பிறகு மொத்த லேகியத்தில் கால்பாகத்தையும், தக்க
வெகுமதிகளையும் மருத்துவருக்குத் தரவேண்டும். பிறகே இந்த
லேகியத்தை உட்கொள்ளத் தொடங்க வேண்டும்.
தினந்தோறும் காலை மாலை ஆகிய இரு

வேளைகளிலும்
ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிட வேண்டும்.
இவ்வாறு
நாற்பத்தெட்டு நாள் சாப்பிட வேண்டும்.
இந்நாள்களில் பெண்
போகம் விலக்கப்பட வேண்டும். இவ்வாறு தவறாமல்
செய்தால் ஒரு மண்டலத்துக்குள் உடம்பு
வியப்படையுமளவு
பொன்னிறம் பெறும்.
-29-
இந்த மேகராசாங்க லேகியத்தை உட்கொண்டால்
உடல்
பொன் போலாகும். இதனால் கீழ்க்கண்ட நோய்கள்
அனைத்தும்
தீரும். இருபது வகையான மேக நோய்கள்,
கபநோய்கள்
தொண்ணூற்றாறு, கிரந்தி அரையாப்பு, சூலை,
மந்தாரம், ஈளை, காசம்,
காமாலை, சோகை, பாண்டு, சயம், குன்மம்,
ஆறுவிதமான
கிரிச்சரங்கள், பதினெட்டு வகையான குஷ்டங்கள்,
இருபத்து ஆறு
வகையான வாய்வுநோய்கள், பித்தத்தால் ஏற்படும்
நாற்பது வியாதிகள், வாத நோய்கள் எண்பது,
உதிரவெள்ளை,
பிரமியம், சிரங்கு, சொறி, கரப்பான், தேமல்,
படர்தாமரை,
பதினெட்டு விதமான சூலை நோய்கள், லிங்கப்புற்று,

யோனிப்புற்று, மேகத்தடிப்பு, ஊறல்,
தொண்டைப்புண்,
கண்டமாலை, எழுவாளை, விப்புருதி, பிளவை,
புற்றுநோய்,
கன்னோசி, கன்னப்புற்று, மகோதரம், உள்மாந்தை,
கவுசி
-30-
பெருவயிறு, காய்ச்சல், கெண்டை, எலும்புச்சுரம்,
அத்திவெட் டை,
உஷ்ணவாயு, அரோசிகங்கள், அன்னதோஷம்,
வெள்ளோக் ாளங்கள், விக்கல், கை கால் எரிவு,
தேகக்காந்தல்,
பெரும்பாடுஎலும்புருக்கி, குழிவாழை, ஆறாதபுண்
வகைகள், இரத்தவாயு,
அழுகண்ணி, நேத்ரவாய்வு, முலைக்குத்து,
மார்பாணி,
தொடைவாழை, இந்த்ர கண்டி, நரம்புச்சிலந்தி முதல்
அறுபத்தெட்டு
வகையான சிலந்திகள், பவுத்திரம், கண் நோய்கள்,
மூல
நோய்கள் அண்ட வாயு, க்ஷயரோகம், நாவில்
உண்டாகும்
வியாதிகள் கூன், குத்து, உப்புசம்,
மேல்மூச்சுவாங்குதல், பெண்களுக்கு
உண்டாகும் பேறுகால நோய்கள் ஏழு, மலட்டுத்தனம்,
அறுபத்து
நான்கு நஞ்சுகள், வண்டு எலி செய்யான் பூரான்
போன்றவற்றின்

கடிகள், இடுப்புச் சூலை, கழல், அண்டவாதம், கல்லடைப்பு,
நீரடைப்பு, துர்மாம்சத்து அடைப்பு, நீரிழிவால் விளையும்
நோய்கள், சலக்கழிச்சல், சீதபேதி, இரத்தக் கடுப்பு,
வெப்புப்பாவை, வெண்குட்டம், கருங்குட்டம்
முதலிய யாவும் ஆம்.

எந்தக் கற்பங்களும் இந்த லேகியத்துக்கு இணையாகாது.

தாது விருத்தி ஆவதுடன் அது இறுகும். நரை திரைகள் நீங்கி
வாலிபத் தோற்றம் உண்டாகும். உடலில் உதிரம் பெருகும்.
நல்ல வாசனை ஏற்படும். கண்கள் செவ்வரளி மலர்களைப்
போல ஒளிவீசும். போகசக்தி நீடிக்கும்.